குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**STC.No.36/2023**

வழக்கு சாட்சி எம.சா. 1

2026ம் **ஜூன்** மாதம் 16 –ம் நாள் மனுதாரர்தரப்பு சாட்சியாகிய 1வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வாசுதேவன் | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

**(Accused present).**

நாள்: 16 .06.2026

**மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

ஆர் டி பைனான்ஸ் தர்மராஜ் என்பவர் மீது வழக்கு காசோலைகள் அவர் வசம் என் மனைவி ஒப்படைத்தது குறித்து அவர் மீது எந்தவித சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். அவர் காசோலை தொலைந்து விட்டதாகவும் தேடித் தருவதாகவும் சொன்னதின் அடிப்படையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எமசா.1, 2 நானும் எனது மனைவியும் சேர்ந்து திட்டமிட்டு தயார் செய்த போலி ஆவணம் என்றால் சரியல்ல. என் மீது எழுமாத்தூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து முடிந்தது என்றால் சரிதான். அந்த வழக்கின் புகார் குற்றமுறையிட்டார் மனைவி ராதிகா என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கு எண் 125/2024 என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது வழக்கறிஞர் மூலமாக ராதிகாவை நான் குறுக்கு விசாரணை செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் ராதிகாவிடம் பணம் வாங்கியதாத்தான் காசோலை வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கில் மனுதாரரின் மனைவி சாட்சியாக விசாரிக்கப்பட்டு அவரது குறுக்கு விசாரணையில் நான் "அந்த வழக்கில் ராதிகா என் கணவரிடம் எதிரி தனியாக ரூபாய் 10 லட்சம் வாங்கியுள்ளார் என்று சொல்லி உள்ளார் என்றால் சரிதான். எங்களது குறுக்கு விசாரணையில் மகளிர் சுய உதவி குழு சம்பந்தமாக காசோலை எதுவும் தரவில்லை என்று ராதிகா சொல்லியுள்ளார் என்றால் சரிதான். என் கணவர் தாக்கல் செய்துள்ள காசோலை வழக்கிற்கும் என்னிடம் மகளிர் சுய உதவி குழு மூலம் வாங்கிய பணத்திற்கும் சம்பந்தமில்லை என்று சொல்லி உள்ளார் என்றால் சரிதான்". **அந்த குறுக்கு விசாரணை பகுதி மசாஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**மறுவிசாரணை**

எழுமாத்தூர் குற்றவியல் நீதிமன்றத்தில் குற்ற எண் 125/2024 இந்த புகார்தாரர் மனைவி ராதிகா அவருடைய குறுக்கு விசாரணையின் போது என்னிடம்

காட்டப்படும் முதல் தகவல் அறிக்கையில் நான் பெரியசாமி மகன் பி. வாசுதேவன் என்பவர் நாங்கள் நடத்திவரும் சாய் டிரஸ்ட் மூலம் மகளிர் சுய உதவி குழு பணத்தை மோசடி செய்து விட்டாய் என்று குறிப்பிட்டு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் அவ்வாறுதான் அவர் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். மோசடி செய்த தொகைக்கு முறையான கணக்கு வழக்கு வைத்துள்ளேன் என்று சாட்சி அளித்துள்ளார் என்றால் சரிதான். அது குறித்து பொருளாதார குற்றப்பிரிவில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.